12th August 1960]

இருக்கலாம். நடைமுறையில் அது கிடைக்கலாம். ஆகவே அதைப்பற்றி அங்கு தோண்டிப் பார்த்து பொன் இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்து பார்ப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : புராணங்களில் இருக்கிற விவரங்களை வைத்துக்கொண்டு காரியங்களைச் செய்வது என்பது இந்த காலத்திற்கு ஒவ்வாது. ஆராய்ச்சி நடத்தி அதன் மூலமாக இருக்கிறது என்று கண்டுபிடித்தால்தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். பூகர்ப தத்துவ சாஸ்திரப்படி இருக்கிறது என்று கண்டு பிடித்தால்தான் அதற்கு பணம் செலவு செய்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறோம். அவ்விதம்தான் பணம் செலவு செய்ய தயாராக இருக்கிறோம். ஆகவே பூகர்ப தத்துவ ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியம் ஆகிறது.

Industrial development

* *Q*.—SRI P. G. MANICKAM
SRI A. A. RASHEED
SRI M. P. SARATHI
SRI N. K. PALANISAMI AND
SRI T. SAMPATH

} கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்கத்தின் பரிசிலனையிலிருக்கும் தொழில் வளர்ச்சிக்கான சர்வே ரிப்போர்ட் எப்போது பிரசுரிக்கப் படும் ?

(ஆ) இந்த ரிப்போர்ட் அச்சடித்தால், அதன் நகல் ஒன்று சட்டசபை நூல் நிலையத்தில் வைக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) : The National Council of Applied Economic Research has not yet finalised its Report on the Techno-economic Survey of Madras State. A copy of the final report will be placed in the Library of the Madras Legislature in due course.

SRI P. G. MANICKAM : இந்த சர்வே ரிப்போர்ட் எவ்வளவு காலத்திற்குப் பிறகு லைப்ரரியில் வைக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அது முடிந்து ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதத்தில் லைப்ரரியில் வைக்கப்படும் என்று நினைக்கிறேன்.

SRI A. A. RASHEED : May I know, Sir, the main findings in the report? Is it a fact that the Council have expressed in favour of investing nearly Rs. 2,000 crores on industries in our State and if so what is the idea of the Government?

MR. SPEAKER : The Hon Minister replied that the report had not yet been finalised. How can the hon. Member ask this question which is out of order and how does he know what the report contains when it is not finalised? Anyhow, if the Hon. Minister is prepared to elucidate the subject, I have no objection.

[12th August 1960

SRI N. K. PALANISAMI : கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நிபுணர்கள் சொன்னதற்கும், எங்களுக்கும் அபிப் பிராய வித்தியாசம் இருக்கிறது என்று. எந்த விஷயத்தில் அபிப்பிராய வித்தியாசம் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : நாங்கள் மின்சாரம் போதாது என்கிறோம். மூன்றாவது திட்டக் காலத்தில் இப்போது அதிகப்படியாக உற்பத்தி செய்யவேண்டும் என்பது எங்களுடைய அபிப்பிராயம். அவர்கள் இங்கே என்ன என்ன தொழில்களுக்கு லைசென்சு கிடைத்திருக்கிறது என்பது எல்லாம் கேட்டார்கள். இவையெல்லாம் தெரிந்த பிறகு சரிப்படுத்து வதாகச் சொல்கிறார்கள். 307 திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிடைத்திருக்கிறது . . . இதுபோல . . .

SRI K. ANBAZHAGAN : பரிசிலனையில் இருந்து வருகிற லோகநாதன் குழு தந்திருக்கிற திட்டமானது 1962-ல் இருந்து 1972 வரைக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய பத்து வருஷ திட்டமா ? அல்லது வேறு சிலர் சொல்வது போல பதினைந்து வருஷத் திட்டமா ? எது உண்மை ?

THE HON. SRI R. VENKATARAMAN : தனியாகக் கேள்வி போட்டால் அதற்குரிய பதிலை அளிக்கிறேன்.

SRI N. K. PALANISAMI : மேலும் இந்தக் குழுவானது விவசாயம் இந்த மாகாணத்தில் அதிகப்படியாக அபிவிருத்தியாகி இருக்கிறதென்று தெரிவித்திருக்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : I do not propose to answer questions about the contents of the report at this stage.

Tamil typewriters

* 147 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க இலாகாக்களின் உபயோகத்திற்காக, 1959, 1960-ம் வருஷங்களிலே எத்தனை தமிழ் தட்டெழுத்து (டைப் ரைட்டிங்) இயந்திரங்கள் விலைக்கு வாங்கப்பட்டன ?

(ஆ) ஜில்லா, தாலூகாக்களிலுள்ள எல்லா இலாகா ஆபீஸ்களுக்கும் இன்னும் எத்தனை தமிழ் தட்டெழுத்து இயந் திரம் தேவை எனக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Four hundred and eighty-three purchased as against 600 sanctioned for 1958–59 and 120 purchased as against 500 sanctioned for 1959–60.

(*b*) Six hundred and ninty-seven are yet to be purchased.

SRI P. G. MANICKAM : ஒவ்வொரு வருஷமும் சர்க்காருக்குத் தேவைப்படுகிற அளவு தட்டெழுத்து இயந்திரங்கள் வாங்கவில்லை